## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 353/மா/2025

நாள் 30.03.2026

N. சேவியர் எட்கர் வாலஸ்
வேலூர் --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
வேலூர் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

வேலூர்–632 007, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவு, மனை எண் 16 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.சேவியர் எட்கர் வாலஸ் என்பவரின் 15.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.09.2025 அன்று பெறப்பட்டு 353/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

### ஆணை

வேலூர்–632 007, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவு, மனை எண் 16 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.சேவியர் எட்கர் வாலஸ் என்பவர் 15.09.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

1. வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண் 16 இல் அமைந்திருக்கும் வீட்டின் குடிநீர் இணைப்பு பெற்ற போது குடிநீர் இணைப்பு எண் 035/003/01103, தற்போது குடிநீர் எண்.035/004/900935.

2. பல வருடங்கள் குடிநீர் இணைப்பு வேண்டும் என்று வேலூர் மாநகராட்சி மண்டல அலுவலகம் எண் 1 இன் அலுவலர்களிடம் கோரிக்கை விடுத்து, 13.04.2018 குடிநீர் இணைப்பு கோரிய விண்ணப்ப கட்டணம் கட்ட அனுமதிக்கப்பட்டேன். அதன்பிறகு அடிக்கடி தொந்தரவு கொடுத்து எட்டு மாதங்கள் கடந்தபின் 26.12.2018 அன்று புதிய இணைப்புக்கு கட்டணம் கட்ட அனுமதிக்கப்பட்டேன். புதிய குடிநீர் கோரிய விண்ணப்பக் கட்டண இரசீது புதிய குடிநீர் இணைப்புக் கட்டண இரசீது இரண்டையும் முன்னும் பின்னுமாக பதிவு செய்து மாண்புமிகு தங்கள் பார்வைக்கு நகல் சான்றாவணம் 1 ஆக இத்துடன் இணைத்துள்ளேன்.

3. அதன்பிறகு மண்டல அலுவலகத்திற்கு நடையாய் நடந்து 23.08.2019 அன்று கிட்டத்தட்ட மேலும் 8 மாதங்கள் கடந்தபின் குடிநீர் இணைப்பு தந்தார்கள், காரணம் இரசீதுக்கு மேல் கையூட்டு அளிக்க மறுத்த காரணத்தால்.

4. அதன்பிறகு குடிநீர் இணைப்பு எண் கோரி பல தடவைகள் அலைந்தபின் இணைப்பு எண் தருவதாக கூறி 2018 ஆம் ஆண்டு விண்ணப்ப கட்டணம் கட்டிய ஏப்ரல் மாதம்

முதல் கட்டணம் கட்ட வற்புறுத்தினார்கள். நான் இணைப்பு அளித்த ஆகஸ்ட் 2019 முதல் கட்டணம் கட்டுவதாக மறுத்துக் கூறி போராடி மனுக்கள் அளித்து 09.02.2021 அன்று நான் கோரிய ஆகஸ்ட் 2019 முதல் குடிநீர் இணைப்பிற்கான கட்டணம் கட்ட அனுமதிக்கப்பட்டேன். அந்த கட்டண இரசீது நகல் சான்றாவணம் 2 ஆக இணைத்துள்ளேன். இந்த விவரங்கள் ஐந்து வருடங்களுக்கு முற்பட்ட சம்பவங்களானதால் மேதகு தங்களின் விசாரணை காலத்திற்கு புறம்பே உள்ளதானதாலும் அது குறித்த மனுக்களின் நகல்களை சான்றாவணங்களாக இத்துடன் இணைக்கவில்லை. வேலூர் மாநகராட்சி நிர்வாக சீர் கேட்டினை மாண்புமிகு தங்களுக்கு புரிய வைப்பதற்கே இவ்விவரங்களை தெரிய படுத்தினேன்.

5. அதன்பிறகு முறையாக தண்ணீர் வருவதில்லை என் முன்னாள் குடிநீர் பணியாளர் திருமிகு சதீஷ் மற்றும் இந்நாள் குடிநீர் பணியாளர் திருமிகு பாலாஜி மற்றும் பொருத்துனர் திருமிகு சுப்பிரமணி ஆகியோரை அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்கள் உதவியினால் தண்ணீர் வராத சமயங்களில் தண்ணீர் பெற்று வந்தேன். ஒவ்வொரு கணக்கீட்டு வருடமும் ஏப்ரல் மாதமே சொத்துவரியுடன் தண்ணீர் வரியும் முன்கூட்டியே செலுத்தும் வழக்கம் உள்ளவன் நான். இறுதியாக 2024–25 கணக்கீட்டு ஆண்டுக்கு 30.04.2024 அன்று குடிநீர் இணைப்பிற்கு கட்டணம் கட்டிய இரசீதின் நகல் சான்றாவணம் 3 ஆக இணைத்துள்ளேன். தற்போதுள்ள பிரச்சனைகளினால் 2025–26 வரி எதுவும் இன்னமும் கட்டவில்லை.

6. ஆனாலும் பல மாதங்கள் தண்ணீர் வராமல், மாமன்ற உறுப்பினரிடம் மண்டல அலுவலக பணியாளர்களிடம் தெருவிற்கு பொது குடிநீர் இணைப்பு அமைத்துத் தரக் கோரியும், இன்று வரை வேலூர் மாநகராட்சியால் பொது குடிநீர் இணைப்பு செயல்படுத்தி தரவில்லை. அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரிய மனுக்கள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டன. பொதுக் குடிநீரும் இல்லாது வீட்டு இணைப்பிலும் தண்ணீர் வராது வீட்டு இணைப்பிற்கு கட்டணமும் முன்கூட்டியே கட்டியமையால் மாண்புமிகு மாநகராட்சி ஆணையருக்கு பதிவு அஞ்சல் வழியே 31.12.2021ல் கட்டணத்தை திரும்ப கோரி மனு அளித்து எந்த மாறுதலுமில்லை, கட்டணமும் திரும்ப கிடைக்கவில்லை. மனு நகல் 4 சான்றாக உள்ளது.

7. அதன்பின் 02.05.2022 அன்று 7 மாதங்களாக தண்ணீர் வரவில்லை என மாண்புமிகு ஆணையர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் வழியே அளித்த மனு நகல் 5 ஆக இணைத்துள்ளேன். ஆகவே அதன்பின் அந்த மனுக்கள் 14.06.2022 அன்று தகவல் சட்ட உதவியால் மதிப்புமிகு மாநகராட்சி தலைமை அலுவலக பொதுத் தகவல் அலுவலரிடம் பத்து தகவல்கள் கோரி 21.07.2022 அன்று மறுப்பு தகவல் பெற்றேன். தகவல் நகல் 6 ஆக இணைத்துள்ளேன்.

8. ஆகவே பத்து மாதங்களாக தண்ணீர் வரவில்லை என மதிப்புமிகு நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலரிடம் 18.10.2022 அன்று மேல்முறையிட்டேன். அந்த மனு நகல் 7 ஆக இணைத்துள்ளேன். பின் அந்த மனு குறித்து தகவல் சட்ட உதவியால் 7தகவல்கள் கோரி மதிப்புமிகு நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை பொதுத் தகவல் அலுவலரிடம் தகவல் கோரிய பின் அந்த மனுவை வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் மாற்றி அனுப்பியதாக 28.11.2022 அன்றும் தகவல் கோரிய மனுவை மாநகராட்சி பொதுத்தகவல் அலுவலரிடம் மாற்றியதாக 05.12.2022 அன்றும் தகவல் பெற்றேன். 28.11.2022 பெற்ற கடிதம் 8 ஆகவும், 05.12.2022 பெற்ற கடிதம் 9 ஆகவும் இத்துடன் இணைத்துள்ளேன்.

9. அதன்பின் மதிப்புமிகு வேலூர் மாநகராட்சி பொதுத் தகவல் அலுவலரின் சில குறைவுள்ள 16.01.2023 அன்று தகவல் பெற்றேன். அந்த குறைவு தகவல் நகல் 10 ஆக இணைத்துள்ளேன். அதன்பின் 17.01.2023 அன்று மீண்டும் மேல்முறையீட்டு வேலூர் மாநகராட்சி குடிநீர் விதிகள் முழுமையாக பெற்றேன். அந்த விதிகள் 16 பக்கங்கள் கொண்ட தொகுப்பை நகல் 11 ஆக இணைத்துள்ளேன். திரும்பவும் 15.02.2023 அன்று தண்ணீர் வராத பத்து மாதங்களுக்கு திரும்ப கட்டணம் கோரி மீண்டும் மேல்முறையிட்டதற்கு திரு. சுப்பிரமணி மாநகராட்சி பொருத்துநர் அவர்கள் அப்படியெனில் எங்கள்து சம்பளத்தில் இருந்துதான் அந்த பத்து மாத கட்டணம் ரூ.2000/– தரவேண்டும் என்று கூறியமையால் மேற்கொண்டு இரண்டாம் மேல்முறையீடு செய்யவில்லை. தொடர்ந்து அதுகுறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஆனாலும் தண்ணீர் வராத பத்து மாதங்களுக்கு கட்டண விலக்கு தர சட்டத்தில் வழிவகையில்லை என்ற தகவலை 05.09.2023 அன்று பெற்றேன். அதன் நகல் 12 ஆக இணைத்துள்ளேன்.

10. அதன்பிறகு சில மாதங்களில் வழக்கதைவிட குறைவான நாட்களே தண்ணீர் வந்தாலும் மாதாமாதம் பிப்ரவரி 2025 வரை தண்ணீர் வந்தது. பிறகு பிப்ரவரி 2025 முதல் மார்ச் 2025 வரை இரண்டு மாதங்கள் தாண்டி 25.04.2025 வரை ஒரு சொட்டு கூட தண்ணீர் வரவில்லை. 25.02.2025 அன்று மண்டல அலுவலக குடிநீர் குறித்தான புகார் பதிவேட்டில் 25 நாட்களாக தண்ணீர் வரவில்லை என புகாரளித்து 13 ஆக, 09.04.2025 அன்று பிப்ரவரி 2025 முதல் தண்ணீர் வரவில்லை என புகாரளித்தது 14 ஆகவும் இத்துடன் இணைத்துள்ளேன்.

11. ஆகவே திரும்பவும் இரண்டு மாதங்களாக ஒரு சொட்டு தண்ணீர் கூட வராத காரணத்தினாலும் பொது குடிநீர் இணைப்பு மாநகராட்சியால் அமைத்து தராத காரணத்தாலும் அடிக்கடி இது போல வேலூர் மாநகராட்சி நிர்வாக குறைவின் காரணமாக நடப்பதால் கட்டிய பணத்தை திரும்பக்கோரி மதிப்புமிகு மண்டல அலுவலக உதவி ஆணையருக்கு 15.04.2025 அன்று பதிவு அஞ்சல் வழியே மனு அளித்தேன். அதன் நகல் 15 ஆக இணைத்துள்ளேன். வேலூர் சித்தூர் மெயின் ரோட்டில் பைப் உடைந்தது கண்டுபிடிக்கப்பட்டு அந்த உடைப்பை சரி செய்ய திறமையான வேலூர் மாநகராட்சி நிர்வாகத்திற்கு கிட்டத்தட்ட மூன்று மாதங்களாகியுள்ளது. அதன்பிறகு 25.04.2025 அன்று தான் தண்ணீர் வந்தது.

12. 15.04.2025 நாளிட்ட மனுவிற்கு மதிப்புமிகு மண்டல உதவி ஆணையர் பதிலேதும் தராத காரணத்தாலும் தண்ணீர் வராத சம்பவம் அடிக்கடி நடப்பதாலும் அதனால் குடிநீர் இணைப்பு பெற்றவர்கள் மிகவும் பாதிப்படைவதாலும் 17.05.2025 அதே கோரிக்கையுடன் மாண்புமிகு மாநகராட்சி ஆணையர், மாண்புமிகு மாநகராட்சி மேயர் ஆகியோருக்கு தனித்தனியே மேல்முறையீட்டு மனு அளித்தேன். அந்த மனுவின் நகலை மதிப்புமிகு மண்டல உதவி ஆணையருக்கும் அனுப்பினேன். அந்த மனு தங்கள் பார்வைக்கு 16 ஆக இணைத்துள்ளேன்.

13. அந்த மனுக்கள் குறித்து எந்த தகவலும் இல்லாததால் தகவல் சட்ட உதவியால் நான்கு தகவல்கள் மதிப்புமிகு மாநகராட்சி தலைமை அலுவலக பொதுத்தகவல் அலுவலரான உதவி ஆணையரிடம் 21.06.2025 அன்று கோரி தகவல் சட்டம் வழங்கும் குறிப்பிட்ட காலத்தில் அவர் தகவல் தராத காரணத்தால் 28.07.2025 அன்று முதல் மேல்முறையீடு மாண்புமிகு மாநகராட்சி ஆணையரிடம் தகவல் பெற்றுத்தர மேல்முறையீட்டு தகவல் அளிக்கும் காலம் கடந்தும் இன்று வரை அவரும் தகவல் எதுவும் தரவில்லை. பொதுத்தகவல் அலுவலரிடம் தகவல் கோரிய மனு நகல் 17 ஆகவும், மாண்புமிகு

மாநகராட்சி ஆணையரிடம் தகவல் பெற்றுத் தரக் கோரி முதல் மேல்முறையிட்ட மனு நகல் 18 ஆகவும் மொத்த சான்றாவணங்களாகவும் இத்துடன் இணைத்துள்ளேன்.

14. இத்துடன் சான்றாவணம் 10 ஆக இணைக்கப்பட்டுள்ள வேலூர் நகராட்சி குடிநீர் விதிகளிலும் தண்ணீர் வராத காலங்களைப் பற்றியோ, அப்படிப்பட்ட காலங்களில் கட்டணம் திருப்பி அளிப்பது குறித்தோ மாற்று வழிகளில் குடிநீர் அளிப்பது குறித்தோ விதிகள் எதுவும் குறிப்பிடவில்லை.

15. ஆகவே இதற்கு நிவாரணம் கோரி மாண்பமை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் போய் பெற்றுக் கொள்ளவே முடிவெடுத்திருந்தேன். ஆனால் சுமார் பத்து நாட்களுக்கு முன்னர் தற்செயலாக இணையத்தினை பார்வையிடும்போது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பற்றியும் மாண்புமிகு தங்களின் ஆணை ஒன்றையும் பார்வையிட வாய்ப்பு கிட்டிற்று, அதனால் தான் இந்த குற்றச்சாட்டுகளை மாண்புமிகு தங்கள் முன் மிகவும் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

16. ஆகவே தாங்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 12 இல் கூறியவாறு அடிக்கடி புகார் முறையிடுவதற்கு ஏதுவாக வேலூர் மாநகராட்சியின் திறமையான நிர்வாகம் இருப்பதால் மேதகு தாங்கள் வேலூர் மாநகராட்சி குடிநீர் விதிகளில் தண்ணீர் அளிக்க முடியாத மாதங்களில் கட்டணத்தை திரும்ப அளிக்க வழிவகை செய்யுமாறு விதிகளை திருத்தம் செய்ய அரசு மற்றும் வேலூர் மாநகராட்சி நிர்வாகிகளுக்கு உத்தரவிட மிகவும் பணிந்து வேண்டுகிறேன்.

17. அதன்படி தண்ணீர் வராமல் நான் பணம் கட்டியுள்ள முன்பு பத்து தற்போது இரண்டு ஆக மொத்தம் 12 மாதங்களுக்கு பணம் திரும்ப தருவதற்கு பதிலாக 2025–26 வருட தண்ணீர் வரிக்கு சரி செய்ய உத்தரவிடவும் மிகவும் பணிந்து வேண்டுகிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 23.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் அ1/2264/2025/ம–1 நாள் 10.12.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

''வேலூர் மாநகராட்சி மண்டலம் 1–க்குட்பட்ட காட்பாடி பர்னீஷ்புரம் ஆசிரியர் காலனி விரிவாக்கம் மனை எண் 16ல் அமைந்திருக்கும் கட்டிடத்திற்கு, புதிய குடிநீர் இணைப்பு வழங்க கோரி விண்ணப்பிக்கபட்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களுக்கு திரு. சேவியர் எட்கர் வாலஸ் என்பவர் புகார் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் கீழ்கண்ட தகவல்கள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

வேலூர் மாநகராட்சி கட்டிட அனுமதி ஆணையின் படி திரு. சேவியர் எட்கர் வாலஸ் என்பவர் தரைதளம்–65.23 சதுர மீட்டர், முதல்தளம்–65.23 சதுர மீட்டர், திறவெளி–83.42 சதுர மீட்டர் மொத்த பரப்பளவு 148.65 சதுர மீட்டர் அளவிற்கு மாநகராட்சியில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தரைதளத்திற்குண்டான அளவினை அளவீடு செய்து சொத்துவரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது. மீதமுள்ள முதல்தளம் மற்றும் திறவெளி மனைக்கு சொத்துவரி மற்றும் காலிமனை வரி விதிப்பு நிர்ணயம் செய்வது நிலுவையில் உள்ளது.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு சட்டம் 1999) பிரிவு 199–ன் துணைப்பிரிவு (1)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி வேலூர் மாநகராட்சி குடிநீர் விநியோகத்தை ஒழுங்குப்படுத்துவதற்காக குடிநீர் திட்ட உபவிதிகள் குடிநீர் இணைப்பு வழங்க துணை சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய குடிநீர் இணைப்பு பெறுவதற்கு கட்டிடத்தின் உரிமையாளர் படிவம்–1–ன் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பத்திர நகல், சொத்துவரி செலுத்திய ரசீது நகல் இணைத்து அளிக்கும் விண்ணப்பத்தினை பரிசீலித்து ஆய்வு, சாலை மறு சீரமைப்பு மற்றும் சென்டேஸ் கட்டணங்களுடன் கட்டுமான பகுதியின் அளவினை பொருத்து வைப்புத்தொகை கேட்பு நிர்ணயிக்கப்படும். படிவம்–2–ல் விண்ணப்பம் பதிவு செய்த தேதியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை வரிசையில் மாநகராட்சி அதிகாரிகளின் நேர் பார்வையின் கீழ் குழாய் பொருத்துனர் மூலம் புதிய குடிநீர் இணைப்பு திரு.சேவியர் எட்கர் வாலஸ், என்பவருக்கு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து குடிநீர் கட்டண கேட்பு எண்.035/004/900935, 2018–2019 இரண்டாவது அரையாண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் மேம்பாட்டு திட்ட பணிக்காக மாநகராட்சி மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒப்பந்த நிறுவனம் மூலம் குடிநீர் இணைப்பு மாநகராட்சி பொறியாளரின் ஆலோசனையின் பேரில் குடிநீர் மேம்பாட்டு திட்ட பணிக்காக ஒப்பந்தத்தின் கீழ் குடிநீர் சேவை இணைப்புகளை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. மேலும் கட்டுமான பரப்பளவு பகுதியை பொருத்து சொத்துவரியுடன் சொத்து வரி விதிப்பின் அடிப்படையில் எவ்வித விடுதலும் இல்லாமல் குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது. தற்போது மேற்படி குடிநீர் கட்டணம் தரைதளம் குடியிருப்பு உபயோகத்திற்காக கட்டணங்கள் மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் முதல் தளத்திற்கு கட்டுமான பரப்பளவின்படி குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யப்படவில்லை.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் காலனி தெருவில் 16 கதவிலக்கம் உள்ள திரு. சேவியர் எட்கர் வாலஸ் என்பவரின் குடியிருப்புக்கு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து விதித்திருக்கும் குடிநீர் கட்டணம் 2018–2019 இரண்டாவது அரையாண்டிற்கு ரூ.550/–, 2019–2020 ஆண்டிற்கான அரையாண்டு கட்டணம் ரூ.800/– ஆக மொத்தம் ரூ.1350/– செலுத்த கேட்பு வழங்கப்பட்டது. மேலும் இக்குடிநீர் கட்டணத்தை அன்னார் அவர்கள் குடிநீர் இணைப்பு பெறப்பட்ட நாளில் இருந்து செலுத்த இயலும் என மறுப்பு தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் 8 மாத குடிநீர் கட்டணம் செலுத்த மறுத்த காரணத்தினால், அதற்கு திரு.கோடீஸ்வரன், குடிநீர் குழாய் பொருத்துனர் பொறுப்பேற்று மேற்கண்ட ரூ.1350/–யினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீதினை அன்னாரிடம் ஒப்படைத்துள்ளார். மேலும் சொத்துவரியின் கீழ் மதிப்பிடப்பட்ட ஒவ்வொரு குடியிருப்பிற்கும் குடிநீர் இணைப்புகளுக்கு நீரின் ஓட்டத்தை கட்டுப்படுத்த நீரோட்டம் கட்டுப்பாட்டு வால்வு மற்றும் கேட் வால்வு அமைக்கும் பணிகள் நிலுவையில் உள்ளது.

குடிநீர் கட்டணங்கள் செலுத்தாததால் ஏற்படும் இழப்புகள் மற்றும் நீர் வழங்கல் சேவைகள் துண்டிக்கப்படுவதால் ஏற்படும் இழப்புகள் கட்டிடங்களின் உரிமையாளர் ஏற்கப்பட வேண்டும். மேலும் தேவைக்கேற்ப சாலை பழுது பார்ப்பு / புணரமைப்பு பணிகளுக்காக இயற்கை இடர்பாடுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெறும் காலங்களுக்காக தடை ஏற்படும் குடிநீர் விநியோகம் பழுது பார்க்கும் பணி சீரமைக்கப்பட்டு முறையாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் காரணமாக குடிநீர் விநியோகம் தடைபடும் காலத்தில், OHT ஆப்ரேட்டர் மூலமாக அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்படாத காரணங்களை தெரிவித்தும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியரகம் வாயிலாக செய்தித்தாள் விளம்பரம் மூலம் அறிவிக்கப்படுகிறது. தனிநபருக்குண்டான குடிநீர் விநியோகத்தை தடை செய்யப்படுவதில்லை. குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டாலும் சொத்துவரி வசூலிக்கும் அதே நடைமுறையை பின்பற்றி குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு

வருகிறது. தண்ணீர் நுகர்வு இல்லாத பட்சத்தில் குறைந்தபட்ச கட்டணங்கள் உரிமையாளர் தண்ணீர் இணைப்பை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ துண்டிக்க விரும்பினால் ரூ.500/–ஐ 30 நாட்களுக்கு முன்பாக முன் கூட்டியே காலத்துடன் செலுத்துவது நடைமுறையில் உள்ளது. குடிநீர் கட்டணம் முன் கூட்டி செலுத்தியிருந்தாலும், தண்ணீர் நுகர்வு இல்லாத நாட்களில் பழுது சரி செய்து இருந்தாலும் குடிநீர் கட்டணங்கள் முறையாக செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு முன் கூட்டி செலுத்தப்பட்ட குடிநீர் கட்டணம் திரும்ப வழங்குவதும், அடுத்த ஆண்டிற்கு குடிநீர் கட்டணத்தை ஈடு செய்யும் திட்டம் அரசு விதிகள் மற்றும் மாநகராட்சி நடைமுறையில் உள்ள குடிநீர் திட்ட உபவிதிகளில் நடைமுறையில் ஏதுமில்லை.

மாநகராட்சி குடிநீர் துணை விதிகளின்படி குடிநீர் இணைப்புகளுக்கு வழங்க வேண்டிய அளவின்படி கூடுதலாக வழங்கினாலும் மாதத்திற்கு 200 ரூபாயாக மட்டும் தான் வசூலிக்கப்படுகிறது. குழாய்களில் மீட்டர் பொருத்தி கணக்கிட்டு குடிநீர் கட்டணம் வசூலிக்கும் பணி நிலுவையில் உள்ளது. மிகையாக குடிநீர் கட்டணங்கள் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. 2025–2026 ஆம் ஆண்டிற்கு வரித்தொகை ஈடு செய்வதற்கு அரசு விதிகள் மற்றும் மாநகராட்சி நடைமுறையில் உள்ள குடிநீர் திட்ட உபவிதிகளில் நடைமுறையில் ஏதுமில்லை.

பொது குடிநீர் குழாய்கள் மற்றும் புதிய குடிநீர் வழங்கல் திட்டத்தை உருவாக்கும் போது நிர்ணயிக்கப்பட்ட பொது குடிநீர் குழாய்கள் நிறுவுவதுடன் பொருளாதாரத்தில் நலிந்தப்பிரிவை சேர்ந்த மக்கள் வசிக்கும் பகுதிகளை தவிர புதிய பொது குழாய்கள் நிறுவப்படக்கூடாது. அத்தகையப் பகுதியில் உள்ள பொது குடிநீர் குழாய்கள் 50% குடியிருப்பு கட்டிடங்களில் குடிநீர் இணைப்பு இல்லாமல் இருக்கும் பட்சத்தில் தேவைக்கேற்ப அமைக்கப்படும். பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் வசிக்கும் இடங்களில் தற்போது பொதுநீரூற்றை பராமரிக்கப்படுவதும் அந்த பகுதியின் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்துடன் மொத்த நீர் விநியோகம் செய்து சொத்து வரியினை சமுதாயம் சார்ந்த அமைப்பின் பேரில் வரியில்லாத இனமாக கருதி குடிநீர் வழங்கலாம் என்பது வேலூர் மாநகராட்சி குடிநீர் திட்ட உபவிதிகள் துணை சட்டங்களாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மாண்பமை முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் மனுதாரர் தன்னுடைய 16.02.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''நான் 15.09.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களிடம் வேலூர் மாநகராட்சி சொத்து வரி மற்றும் தண்ணீர் வரி குறித்து படிவம் 1 இன் மூலம் இரு குற்றச்சாட்டுகள் தேவையான சான்றாவணங்களுடன் அளித்து, மாண்புமிகு நடுவர் அவர்களும் அக்குற்றச்சாட்டுகளை 353/மா/2025 மற்றும் 354/மா/2025 என எண்ணிடப்பட்டு அக்குற்றச்சாட்டுகளை வழக்காக பதிவு செய்துள்ளார்கள்.

இந்நிலையில் 2024–25, 2025–26 ஆண்டுகளுக்கான சொத்துவரி மற்றும் தண்ணீர் வரி அபராதத்துடன் கட்ட அறிவுறுத்தி 14.02.2026 அன்று வேலூர் மாநகராட்சியிலிருந்து அறிவிப்பு அளித்தார்கள். ஏற்கனவே மாண்புமிகு முறைமன்ற நடுவத்திடம் புகாரளித்து வழக்கு நிலுவையில் உள்ளதைக்கூறி அவ்வறிவிப்பை வாங்க மறுத்துள்ளேன். ஆனாலும், அந்த அறிவிப்பை எனது அலைபேசியில் பதிவு செய்துள்ளேன். அதில் 2024–25 வருடத்திற்கு காலதாமதகமாக கட்டப்போவதால் அபராதம் விதித்துள்ளனர். அந்த பதிவு செய்த அறிவிப்பின் நகல் இத்துடன் இணைத்துள்ளேன்.

நான் முன்கூட்டியே வரி கட்ட முயற்சிக்கும் போது குடியிருப்பு பயன்பாட்டை வணிகப் பயன்பாடாக மாற்றி கூடுதல் வரி விதித்து பிரச்சனையை உருவாக்கியது வேலூர் மாநகராட்சியே ஆகவே தான் படிப்படியாக மண்டல துணை ஆணையர், ஆணையர், மேயர் ஆகிய பெருமக்களிடம் முறையீட்டு பயனின்றி மாண்புமிகு முறைமன்ற நடுவத்திடம் முறையீட்டு மாண்பமை அவர்களும் அதனை வழக்காக பதிவு செய்து அந்த இரு வழக்குகளும் நிலுவையில் உள்ள காரணத்தால் அபராதமாக எந்த தொகையும் கட்டமுடியாது என்றும் மாண்பமை முறைமன்ற நடுவத்தின் முடிவு தெரியா நிலையில் எத்தொகையும் கட்ட வழிவகை இல்லை என்பதை இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த மனுவினை மேதகு தங்களுக்கும் இந்த மனுவின் பொருண்மை வேலூர் மாநகராட்சி மண்டல அலுவலகம் எண் 1 இன் உதவி ஆணையர் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையர் ஆகிய பெருமக்களுக்கும் பதிவு அஞ்சல் வழியே மிகவும் பணிந்து அனுப்பியுள்ளேன்.''

5. மனுதாரரின் குற்றச்சாட்டு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 27.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''<u>குற்றச்சாட்டின் விவரங்கள் பின்வருமாறு</u> :–

வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் வீட்டின் குடிநீர் இணைப்பு எண்.035/003/01103, தற்போது குடிநீர் எண்.035/004/900935.

வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1ன் அலுவலரிடம் குடிநீர் இணைப்பு வேண்டி பல வருடங்கள் கோரியும், 13.04.2018 அன்று குடிநீர் கோரிய இணைப்பு விண்ணப்ப கட்டணம் கட்ட அனுமதிக்கப்பட்டேன். அதன்பின்னர் 8 மாதங்கள் கடந்து 26.12.2018 அன்று புதிய இணைப்பு கட்டணம் கட்ட அனுமதிக்கப்பட்டேன். புதிய குடிநீர் இணைப்பு கட்டண விண்ணப்ப இரசீது மற்றும் புதிய குடிநீர் இணைப்பு இரசீது இரண்டையும் முன்னுக்கு முரனாக பதிவு செய்தது குறித்து மண்டல அலுவலகத்திற்கு பலமுறை சென்றபிறகு 8 மாதங்கள் கடந்தபிறகு 23.08.2019 அன்று குடிநீர் இணைப்பு வழங்கினார்கள் பின்னர் 09.02.2021 அன்று ஆகஸ்ட் 2019 முதல் குடிநீர் இணைப்பிற்கான கட்டணம் செலுத்தியுள்ளேன்.

மேலும் 2024–25 கணக்கீட்டு ஆண்டில் 30.04.2024 அன்று குடிநீர் செலுத்தி விட்டேன். தற்சமயம் உள்ள பிரச்சினையால் 2025–2026 வரி எதுவும் இந்நாள் வரை கட்டவில்லை.

12 மாதங்களாக தண்ணீர் வராமல் இருந்தது. இருப்பினும் அக்கால கட்டத்திற்கான குடிநீர் வரி என்னால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, தண்ணீர் வராமல் இருந்த காலத்திற்கு நான் கட்டிய தொகையினை வரும் 2025–2026 வருடத்திற்கான தண்ணீர் வரிக்கு வரவு வைத்து உரிய ரசீதினை வழங்குமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.''

7. எதிர்மனுதாரர் தரப்பில் வேலூர் மாநகராட்சி உதவிப் பொறியாளர் 27.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“வேலூர்–632 007, பர்னீஷ்புரம், காட்பாடி மனை எண்.16 ஆசிரியர் காலனி விரிவு என்கிற முகவரியில் வசிக்கும் N.சேவியர் எட்கர் வாலஸ் என்பவர் புகார் மனு சம்பந்தமான விவரங்கள் பின்வருமாறு :–

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 1999) பிரிவு 199–ன் துணைப்பிரிவு (1)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி வேலூர் மாநகராட்சி மனுதாரர் சமர்ப்பித்த பத்திர நகல், சொத்துவரி செலுத்திய ரசீது நகல் ஆகியவற்றை ஆய்வு செய்து அதனடிப்படையில் குடிநீர் வரி நிர்ணயம் செய்யப்பட்டு மனுதாரருக்கு குடிநீர் கட்டண கேட்பு எண்.035/004/900935, 2018–2019 இரண்டாம் அரையாண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரின் குடியிருப்புக்கு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து விதித்திருக்கும் குடிநீர் கட்டணம் 2018–2019 இரண்டாவது அரையாண்டிற்கு ரூ.550/– 2019–2020 ஆண்டிற்கான அரையாண்டு கட்டணம் ரூ.800/– ஆக மொத்தம் ரூ.1350/– செலுத்த கேட்பு வழங்கப்பட்டு அத்தொகை கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டாலும் சொத்துவரி வசூலிக்கும் அதே நடைமுறையை பின்பற்றி குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் நுகர்வு இல்லாத பட்சத்தில் குறைந்த பட்ச கட்டணங்கள், உரிமையாளர் தண்ணீர் இணைப்பை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ துண்டிக்க விரும்பினால் ரூ.500/–ஐ 30 நாட்களுக்கு முன்பாக முன் கூட்டியே காலத்துடன் செலுத்துவது நடைமுறையில் உள்ளது. குடிநீர் கட்டணம் முன் கூட்டி செலுத்தியிருந்தாலும், தண்ணீர் நுகர்வு இல்லாத நாட்களில் பழுது சரி செய்து இருந்தாலும், குடிநீர் கட்டணங்கள் முறையாக செலுத்தப்படவேண்டும். அவ்வாறு முன் கூட்டி செலுத்தப்பட்ட குடிநீர் கட்டணம் திரும்ப வழங்குவதும், அடுத்த ஆண்டிற்கு குடிநீர் கட்டணத்திற்கு ஈடு செய்யும் திட்டம் அரசு விதிகள் மற்றும் மாநகராட்சி நடைமுறையில் உள்ள குடிநீர் திட்ட உபவிதிகளில் நடைமுறையில் ஏதுமில்லை. மிகையாக குடிநீர் கட்டணங்கள் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை, என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

8. மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம், எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் வீட்டின் குடிநீர் இணைப்பு எண்.035/003/01103 தற்போது குடிநீர் இணைப்பு எண்.035/004/900935–ற்கு வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1ன் அலுவலரிடம் குடிநீர் இணைப்பு வேண்டியதற்கு பல வருடங்கள் கழித்து குடிநீர் இணைப்பு விண்ணப்ப கட்டணம் கட்ட அனுமதிக்கப்பட்டது என்பதும், பிறகு 8 மாதங்கள் கடந்து புதிய இணைப்பு கட்டணம் கட்ட அனுமதிக்கப்பட்டது என்பதும், புதிய குடிநீர் இணைப்பு கட்டண விண்ணப்ப இரசீது மற்றும் புதிய குடிநீர் இணைப்பு இரசீது இரண்டையும் முன்னுக்குப்பின் முரணாக பதிவு செய்தது குறித்து மண்டல அலுவலகத்திற்கு பலமுறை சென்றபிறகு 8 மாதங்கள் கடந்தபிறகு தான் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது என்பதும், பின்னர் 09.02.2021 அன்று ஆகஸ்ட் 2019 முதல் குடிநீர் இணைப்பிற்கான கட்டணமும் 2024–25 கணக்கீட்டு ஆண்டில் 30.04.2024 அன்று

குடிநீர் வரி மனுதாரரால் செலுத்தப்பட்டது என்பதும், 2025–2026 வரி எதுவும் இந்நாள் வரை கட்டவில்லை என்பதும், 12 மாதங்களாக தண்ணீர் வராமல் இருந்தும், அக்கால கட்டத்திற்கான குடிநீர் வரி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதால், தண்ணீர் வராமல் இருந்த காலத்திற்கு தான் கட்டிய தொகையினை வரும் 2025–2026 வருடத்திற்கான தண்ணீர் வரிக்கு வரவு வைத்து உரிய ரசீதினை வழங்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

வேலூர்–632 007, பர்னீஷ்புரம், காட்பாடி மனை எண்.16 ஆசிரியர் காலனி விரிவு என்கிற முகவரியில் வசிக்கும் N.சேவியர் எட்கர் வாலஸ் என்பவரின் புகார் மனு குறித்து, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 1999) பிரிவு 199–ன் துணைப்பிரிவு (1)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி வேலூர் மாநகராட்சி மனுதாரர் சமர்ப்பித்த பத்திர நகல், சொத்துவரி செலுத்திய ரசீது நகல் ஆகியவற்றை ஆய்வு செய்து அதனடிப்படையில் குடிநீர் வரி நிர்ணயம் செய்யப்பட்டு மனுதாரருக்கு குடிநீர் கட்டண கேட்பு எண்.035/004/900935, 2018–2019 இரண்டாம் அரையாண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் குடியிருப்புக்கு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து விதித்திருக்கும் குடிநீர் கட்டணம் 2018–2019 இரண்டாவது அரையாண்டிற்கு ரூ.550/– மற்றும் 2019–2020 ஆண்டிற்கான அரையாண்டு கட்டணம் ரூ.800/– ஆக மொத்தம் ரூ.1350/– செலுத்த கேட்பு வழங்கப்பட்டு அத்தொகை கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்பதும், குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டாலும் சொத்துவரி வசூலிக்கும் அதே நடைமுறையை பின்பற்றி குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதும், தண்ணீர் நுகர்வு இல்லாத பட்சத்தில் குறைந்த பட்ச கட்டணங்கள், உரிமையாளர் தண்ணீர் இணைப்பை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ துண்டிக்க விரும்பினால் ரூ.500/–ஐ 30 நாட்களுக்கு முன்பாக முன் கூட்டியே காலத்துடன் செலுத்துவது நடைமுறையில் உள்ளது என்பதும், குடிநீர் கட்டணம் முன் கூட்டி செலுத்தியிருந்தாலும் மற்றும் தண்ணீர் நுகர்வு இல்லாத நாட்களுக்கும் குடிநீர் கட்டணங்கள் முறையாக செலுத்தப்படவேண்டும் என்பதால், அவ்வாறு மனுதாரர் குடிநீர் கட்டணம் செலுத்தியிருந்தாலும், முன் கூட்டி செலுத்தப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் நுகர்வு இல்லாத காலத்திற்கும் செலுத்திய குடிநீர் வரி ஆகியவற்றை திரும்ப வழங்குவதற்கும், அடுத்த ஆண்டிற்கான குடிநீர் வரிக்கு ஈடு செய்வதற்கும், அரசு விதிகள் மற்றும் நடைமுறையில் உள்ள மாநகராட்சி குடிநீர் திட்ட உபவிதிகளில் ஏதுமில்லை என்பதும், மிகையாக குடிநீர் கட்டணங்கள் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை என்பதும் எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் மனுதாரரின் வீட்டிற்கு அளிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் வரி குறித்தான புகார் குறித்து, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 1999) பிரிவு 199–ன் துணைப்பிரிவு (1)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி வேலூர் மாநகராட்சி மனுதாரர் சமர்ப்பித்த பத்திர நகல், சொத்துவரி செலுத்திய ரசீது நகல் ஆகியவற்றை ஆய்வு செய்து அதனடிப்படையில் மனுதாரர் குடியிருப்புக்கு குடிநீர் இணைப்பு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்தும் விதிக்கப்படும் குடிநீர் இணைப்பு கட்டணம் மற்றும் குடிநீர் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், முன் கூட்டி செலுத்தப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் நுகர்வு இல்லாத காலத்திற்கும் செலுத்திய குடிநீர் வரி ஆகியவற்றை திரும்ப வழங்குவதற்கும், அடுத்த ஆண்டிற்கான குடிநீர் வரிக்கு ஈடு செய்வதற்கும், அரசு விதிகள் மற்றும் மாநகராட்சி நடைமுறையில் உள்ள குடிநீர் திட்ட உபவிதிகளில் நடைமுறையில் ஏதுமில்லை என வேலூர் மாநகராட்சி உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், வேலூர் மாநகராட்சியால் மனுதாரருக்கு விதிக்கப்பட்ட சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் வரி ஆகியவை **அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில்** உள்ளது

என்று அறிய முடிவதால், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. N. சேவியர் எட்கர் வாலஸ்,
மனை எண் 16,
ஆசிரியர் காலனி விரிவு,
பர்னீஷ்புரம், காட்பாடி,
வேலூர்–632 007.

(2) ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்–632 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

7/4/26
செயலாளர்.

7/4/26 1/10

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032